முருகப்பெருமான் துணை

**மகான் யூகிமுனிவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.06.2022, புதன்கிழமை

1. பிரணவ ராஜனே அரங்கனே
பிரபஞ்சம் காக்க வேண்டி
சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது விடை திங்கள்
ஆசிபட இருபானை திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 25 ம் நாள், 08.06.2022 புதன்கிழமை)
அருளுவேன் யூகி முனிவர் யானும்
3. யானும் அருளாசி தன்னை
உலகநலம் பெற உரைப்பேன்
ஞானமாக மக்களை அனுகி
ஞானயுகம் படைக்க அருளும்
4. அருளும் அரங்க ஞானியரின்
அருள் உபதேசங்கள் தன்னை
வரமாகப் பெற்ற மக்களுக்கு
வந்தவினை அனைத்தும் அகலும்
5. அகலுமே ஏவல் இடை வஞ்சமும்
அனுகுமே ஞானிகள் துணை
செகத்தினில் வெற்றி காணவே
சித்திகளும் மேன்மைகளும் வந்தடையும்
6. அடையவே சைவ நெறியோடு
ஆற்றல் தரும் தரும வழியை
தடையற ஏற்றுச் செய்யும்
தரணியோர் அனைத்து பேருக்குமே
7. ஆகுமே தருமபலம் தனபலம்
ஆயுள் கீர்த்தி அதி வளம்
பகை வெல்லும் சர்வபலம்
பண்பு பக்குவ இறைபலமும்
8. பலமும் கூடி துணிவுபட
பாருலகை மாற்றும் சக்திகளாக
வலம் வருவர் அரங்கமகான்
வளர்க்கும் ஞானப் படைகளாக
9. ஆகவே சிறந்து கலியின்
அனைத்து அல்லலையும் விரட்டி
செகத்தினில் அமைதி படைப்பர்
சிறப்பான வாழ்வும் காண்பர்

10. காண்கவே ஞானிகள் ஆகும்
கருணையும் அருள் ஆசியும்
சண்முகனார் தயவும் பெற்று
சற்குரு அரங்கனால் தேறுவர்

11. தேறியே ஞானிகள் ஆவர்
தேர்வு செய்து ஞானசபை ஆக்கி
கூறிடுவேன் ஞான ஆட்சிபடைப்பர்
கூறிவந்த அருளாசி முற்றே

—சுபம்—